وَمَا لِاَحَدٍ عِنْدَهٗ مِنْ نِّعْمَةٍ تُجْزٰٓى ﴿۱۹﴾ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ
رَبِّهِ الْاَعْلٰى ﴿۲۰﴾ وَلَسَوْفَ يَرْضٰى ﴿۲۱﴾ ع ۱ ۲۱ ۱۷

سُوْرَةُ الضُّحٰى مَكِّيَّةٌ وَّهِيَ اِحْدٰى عَشْرَةَ اٰيَةً

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالضُّحٰى ﴿۱﴾ وَالَّيْلِ اِذَا سَجٰى ﴿۲﴾ مَا وَدَّعَكَ رَبُّكَ وَمَا قَلٰى ﴿۳﴾
وَلَلْاٰخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ الْاُوْلٰى ﴿۴﴾ وَلَسَوْفَ يُعْطِيْكَ رَبُّكَ
فَتَرْضٰى ﴿۵﴾ اَلَمْ يَجِدْكَ يَتِيْمًا فَاٰوٰى ﴿۶﴾ وَوَجَدَكَ ضَآلًّا
فَهَدٰى ﴿۷﴾ وَوَجَدَكَ عَآئِلًا فَاَغْنٰى ﴿۸﴾ فَاَمَّا الْيَتِيْمَ فَلَا تَقْهَرْ ﴿۹﴾
وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنْهَرْ ﴿۱۰﴾ وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ﴿۱۱﴾ ع ۱ ۱۱ ۱۸

سُوْرَةُ الشَّرْحِ مَكِّيَّةٌ وَّهِيَ ثَمَانِ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

اَلَمْ نَشْرَحْ لَكَ صَدْرَكَ ﴿۱﴾ وَوَضَعْنَا عَنْكَ وِزْرَكَ ﴿۲﴾
الَّذِيْٓ اَنْقَضَ ظَهْرَكَ ﴿۳﴾ وَرَفَعْنَا لَكَ ذِكْرَكَ ﴿۴﴾ فَاِنَّ مَعَ
الْعُسْرِ يُسْرًا ﴿۵﴾ اِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا ﴿۶﴾ فَاِذَا فَرَغْتَ فَانْصَبْ ﴿۷﴾
وَاِلٰى رَبِّكَ فَارْغَبْ ﴿۸﴾ ع ۱ ۸ ۱۹

19. (மனிதர்களில்) எவருக்கும் (தன் தர்மத்தின் மூலம் பிரதிபலனைக் கருதிக்)
கொடுக்கப்படும் எந்த உபகாரமும் தம்மிடம் இல்லை;
20. மிக்க மேலான தம் இரட்சகனின் முகத்தைத் தேடியே தவிர (வேறு எந்த
நோக்கத்துடனும் அவர் செலவுசெய்யவில்லை).
21. மேலும், (தம் இரட்சகனின் நற்கூலியைக்கொண்டு வெகுவிரைவில்) அவரும்
திருப்தியடைவார்.

---

அத்தியாயம் : 93

## அள்ளுஹா _ முற்பகல்

வசனங்கள் : 11 மக்கீ ருகூஃ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. முற்பகல் மீது சத்தியமாக!
2. (இருண்ட) இரவின் மீதும் சத்தியமாக_அது ஒடுங்கிவிட்டால்_
3. (நபியே!) உமதிரட்சகன் உம்மைக் கைவிடவில்லை; (உம்மை) அவன்
வெறுக்கவுமில்லை.
4. மேலும், (மறுமையெனும்) பிந்தியதானது (இம்மையெனும்) முந்தியதைவிட
உமக்கு மிகச் சிறந்ததாகும்.
5. இன்னும், உமதிரட்சகன் அடுத்து (ப்பல உயர்பதவிகளை) உமக்கு அளிப்பான்;
அப்போது நீர் திருப்தியடைவீர்.
6. உம்மை அவன் அநாதையாகக் கண்டுகொள்ளவில்லையா? ஆகவே,
(அரவணைப்புப் பெற்று நீர் ஆறுதல் பெற) அவன் இடம் அளித்தான்.
7. மேலும், (வேதம் என்ன மார்க்கம் என்னவென்பதைப்பற்றி) தெரியாதவராக
உம்மை அவன் கண்டான்; ஆகவே (அதற்கு) அவன் (உமக்கு) வழி காட்டினான்.
8. மேலும், தேவையுடையவராக அவன் உம்மைக் கண்டான்; ஆகவே, (உமது
தேவையை நிறைவேற்றி உம்மை) தேவையற்றவராக ஆக்கிவிட்டான்.
9. ஆகவே, நீர் அநாதையைக் கடிந்து கொள்ளாதீர்!
10. இன்னும், (தர்மம்) கேட்பவரை விரட்டாதீர்!
11. மேலும், (உம்மீது புரிந்துள்ள) உமதிரட்சகனின் அருட்கொடையைப்பற்றி
(அவனுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு) அறிவித்துக்கொண்டிருப்பீராக!

---

அத்தியாயம் : 94

## அஷ்ஷரஹ் _ விரிவாக்குதல்

வசனங்கள் : 8 மக்கீ ருகூஃ : 1

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. (நபியே!) உமது நெஞ்சை உமக்காக நாம் விரிவாக்கவில்லையா?
2. மேலும், உமது சுமையை உம்மை விட்டும் நாம் இறக்கிவிட்டோம்;
3. அ(ச்சுமையான)து எத்தகையதென்றால், உமது முதுகை முறித்து
(உமக்குப்பளுவாகி) விட்டது.
4. உமது நினைவை (கீர்த்தியை) உமக்காக நாமே உயர்த்தினோம்.
5. ஆகவே, நிச்சயமாகக் கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது.
6. நிச்சயமாகக் கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது.
7. ஆகவே, நீர் (உலகக் காரியங்களிலிருந்து)விடுபட்டால் (தொழுவதற்கு) நீர்
சிரத்தை எடுத்துக் கொள்வீராக!
8. மேலும், உமதிரட்சகன்பக்கம் நீர் விருப்பம் கொள்வீராக!